மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும்
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும்
கனிவான கவனத்திற்காக பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு 1.12.2006 தேதியில் எனக்கு மாற்றுப்பணி வழங்கவும் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட அரசாணைகளின்படி கலைக்கப்பட்ட தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்கழக பணியாளர்கள் அனைவரையும் அரசு துறைகளுக்குள் ஈரத்துக்கொள்ளும் முழு வடிவ இறுதி ஆணையை விரைவில் பிறப்பிக்கவும் உரிய பரிந்துரைப்புகளை செய்ய வேண்டும் என்று சமர்ப்பித்த மனுவின் மீது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சரின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளருக்கு தருமபுரி மாவட்ட பொருளாதார மேம்பாட்டுச்சங்கம் தனது ந.க.எண்.183 - 2000 - அ2 நாள் 22.2.2007 கடிதத்தில் இதற்கான முன்மொழிவுகள் அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பும் பொருட்டு ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் அலுவலகத்தின் பரிசீலனையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. மற்ற மாவட்டங்களில் இருப்பது போல தருமபுரி மாவட்டத்திலும் மத்திய அரசின் வழிகாட்டல்படி DRDA உருவாக்கப்படுவதற்காக தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்கழகத்தை கலைப்பதற்கான உத்திரவு 2000ம் வருடம் பிறப்பிக்கப்பட்டது.

தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்கழகம் கலைப்பட்டால் இதன் பணியாளர்களின் நிலை பற்றிய ஐயம் எழுந்தபோது முதல்வர் கலைஞர் கருணாநிதி யாரும் பணி இழக்க சம்மதிக்கமாட்டார் என்று நம்பிக்கை கொடுக்கப்பட்டது. அதன் படி பிறப்பிக்கப்ட்ட அரசு ஆணைகளை தொடர்ந்து இதன் பணியாளர்கள் இதர துறைகளில் அயல் பணியில் பணியாற்றி வருகிறார்கள். இது நித்ய கண்டம் பூர்ண ஆயுசு போன்றதுதான். 60 பணியாளர்களில் எனக்கு மட்டும் பணியிடம் வழங்கப்படாமல் இருந்தது. இப்போது இன்னொருவருக்கும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. நாளை இன்னெருவருக்கும் இந்த நிலை ஏற்பட்டு இப்படியே மற்றவர்களுக்கும் தொடரலாம். சில அதிகாரிகளின் விருப்பு வெறுப்பு இதனை தீர்மானிக்கும் கருவியாக உள்ளது.

செல்வி .அபூர்வா ஐ.ஏ.எஸ் அவர்கள் தருமபுரி மாவட்ட ஆட்சியராக இருந்தகாலத்தில் தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்கழக பணியாளர்கள் அனைவரையும் அரசு துறைகளுக்குள் ஈரத்துக்கொள்ளும் முழு வடிவ இறுதி ஆணையை விரைவில் பிறப்பிக்க நிறைய முயற்சி மேற்கொண்டார்கள். அரசு துறைகளுக்குள் ஈரத்துக்கொள்ளும் இறுதி ஆணையை வலியுறுத்தி சம்ந்தப்பட்ட துறைகளுக்கு கடிதம் அனுப்புவது மட்டுமின்றி சென்னை செல்ல

நேர்ந்த போதிலெல்லாம் முடிகிற போதிலெல்லாம் சம்மந்தப்பட்ட அலுவலகங்களுக்கும் நேரில் சென்று வலியுறுத்தி வந்தார்கள்.

தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்கழகம் கலைக்கப்பட்ட தருணத்தில் கலைக்கப்பட்ட TANCOF நிறுவன ஊழியர்கள் அனைவரையும் 2002 வருடத்திற்குள்ளேயே அரசு துறைகளுக்குள் ஈர்த்துக்கொள்ள நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டு அதில் வெற்றியும் பெற்றார் அப்போது TANCOF நிறுவன தலைவராக இருந்த திரு.புஜங்க ராவ் ஐ.ஏ.எஸ்.

20.01.2009 ஆரம்பமானால் தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்கழகம் கலைக்கப்பட்டு 9 வருடங்கள் முடிவுற்று 10 வது வருடம் ஆரம்பமாகிறது.

எனவே இக்கழகத்தின் 60 பணியாளர்களின் எதிர்காலம் கருதி இக்கழகம் கலைக்கப்பட்ட நாளிலிருந்து அரசு பணியாளர்களாக ஏற்று உரிய ஆணையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரைவில் பிறப்பிக்கவும் இதற்கான பரிந்துரையை மாண்புமிகு.உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் வழங்கவும் இவ்விண்ணப்பம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.வசந்த குமார்
உதவி மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி அலுவலர் (தேர்வு நிலை)
தருமபுரி மாவட்ட சமூகப்பொருளாதார மேம்பாட்டுச் சங்கம்
தருமபுரி - 636 705